

Vol.22 | No. 4 | April 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Festal Greetings to Our Dear Bishop

## MAR GEORGE RAJENDRAN SDB






TCYM - Executive Members, Padanthalumoodu 2018-2019




TCYM, Executive Members, Nithiravilai - 2018-2019



Palm Sunday, Netta
25.03.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :4 April 2018

# இறையருள்
# IRAIARUL



## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 05 |
| சிறுமலர் இயக்கம் | 06 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 07 |
| மதுரை திருத்தொண்டுதளம் | 08 |
| இளையோர் இயக்கம் | 09 |
| சமூக சேவை சங்கம் | 11 |
| இல்வாழ்வு இயக்கம் | 14 |
| Feast and B'day | 15 |
| மறைவட்டச் செய்திகள் | 16 |
| இதரச் செய்திகள் | 19 |
| Bishop's Engagements | 20 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/80/2018 31 March 2018

Dears,

We are in the season of Easter. All of us were busy with the celebration of the Holy Week. On Easter Sunday, we celebrated the resurrection of Jesus. The attendance in our churches during these days was more than all other Sundays of the year. Songs of resurrection were ringing out from our churches. The congregations gathered in their finest clothes to worship during those days.

And yet, for some of us Holy Week could have been a difficult day. There are reasons why these days can be a struggle for many of us. Some of these issues can be listed out.

***The days are often overwhelmingly busy.**

From early morning preparation to events throughout the day, Priests are on the go throughout the day. Some churches add special services for these special days. For some Priests, the days are so full that they have little time to focus on their own personal worship.

*** The pressure to 'do well' is increased.**

The crowd is bigger, but many are giving the church only this one opportunity to grab their attention. No church leader wants to mess up on Holy Week. Consequently, every small issue - each off note, every stumbled-over word, and every unintended delay - gets magnified.

*** Finding a unique approach to the Easter story is not easy.**

The story itself is enough, of course, but some Priests sense a need to present the story in a fresh and enlightening way. The task of finding that new approach when everyone else is preaching on the same topic can be stressful.

*** Priests see members they have not seen since last Easter.**

On one hand, that's good news. Priests are typically glad to see members return, hoping they will recommit themselves to faithfulness this year. On the other hand, Priests often end these days wondering why they cannot reach those same folks the rest of the year.

*** Priests see 'lostness' come in the door . . . and leave unchanged.**

Yes, Priests trust the Word of God will do its work. Yes, they know that planting a seed is a first step toward others being converted. It is still agonizing, though, when they see non-believers walk in the door and out the door on Easter with no obvious response to the gospel.

*** Priests get a glimpse of what the church could be . . . but typically isn't.**

Parking lot attendants are ready, and they even arrive early. People are well dressed and easily identified. The best musicians and singers are enlisted. The sermons and liturgies are well rehearsed. The church gives its best for these days - but then returns to mediocrity the following week. That is frustrating.

*** Priests often judge their own sermons more critically on Easter days.**

Many of us review our sermons after each service. We think through how we might have re-worded that point, changed that illustration, or clarified that application. That critique is sometimes more intense on Holy Week, as no Priest wants to have missed the opportunity to proclaim the gospel clearly and boldly.

***Priests brag about Easter attendance.**

It happens. Priests excited about Easter attendance often make sure others know about their successes during the weeks following the Holy Week. Unhealthy, even ungodly, competition develops. Nobody wants to play the game, but few people want to lose the game, either.

***Attendance expectations may not be met.**

We always have Holy Week attendance goal in our minds. Even when we fight hard to stop worrying about numbers, our minds still go there. Too often we became discouraged because the actual attendance did not meet our goals.

***Monday morning letdown can follow Easter.**

For weeks, Priests' energies are devoted to preparing for the Holy Week. Teams get ready so that the church operates as a well-oiled machine on these days. Everyone is focused, committed - and a bit relieved when it is all over. Monday morning means a return to the routine.

***Some Priests have no resurrection joy themselves.**

For some, ministry is hard. They serve one church while seeking the next one. In their personal lives, they may be struggling. They must proclaim the hope of resurrection when their own hope is dying. Holy Week then becomes a chore

to endure rather than days to celebrate.

As we have celebrated the Holy Week, it is important that we ask ourselves, how we spent these days of grace? Have we made these days meaningful for our people through our well-prepared animations? We are as Humans; we may have made some mistakes. This is not the time for discouragement. Ask our parishioners to pray for us so that we can avoid repeating similar mistakes in the future. In the meantime, spent these days of Easter in the company of the resurrected Lord and bring our people to his feet so that all of us can benefit much from the celebration of the paschal mysteries of Christ.

**CONCLUSION**

On 8 April 2018, we celebrate the Divine Mercy Sunday. It is originally based on the devotion to the Divine Mercy that Saint Faustina Kowalska reported as part of her encounter with Jesus, and is associated with special promises from Jesus and indulgences that the Church has issued. I invite you, dear Fathers, to make this day special for our people. Kindly organize special devotional practices on this day and propagate devotional practices to the Divine Mercy like the recitation of the chaplet of Divine Mercy among the faithful. We are also beginning our Madurai Mission this month. It will be the first initiative that we will be taking after the territory of our Eparchy was extended. Let us ask the good Lord to bless this venture and to make us missionary-minded in all the ministries that we carry out.

With my prayers and blessings,

+George Rajendran SDB

Bishop of Thuckalay

**இருநாள் தொடர்பயிற்சி**

அருட்தந்தையர்களுக்கான இருநாள் கருத்தரங்கு மார்ச் 12 மற்றும் 13 ஆகிய இருநாட்கள் தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட துணை ஆயர் மார் டோமி தறயில் அவர்கள் கருத்தரங்கை வழிநடத்தினார். 40 அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

**மதுரை திருத்தொண்டுதள தொடக்கவிழா**

மதுரை திருத்தொண்டுதள தொடக்கவிழா ஏப்ரல் 15 அன்று நடைபெறும். இதன் வளர்ச்சிக்காக அதற்கு முந்தைய தினம் மார்ச் 14 அன்று காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை ஆயர் இல்ல சிற்றாலயத்தில் ஆராதனை நடைபெறும்.



# CATECHISM மறைக்கல்வி

"கிறிஸ்துவை பற்றியே நாங்கள் அறிவித்து வருகிறோம். கிறிஸ்துவோடு இணைந்து ஒவ்வொருவரும் முதிர்ச்சி நிலை பெறுமாறு ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறி முழு ஞானத்தோடு கற்பித்து வருகிறோம்" (கொலோ 1:28)

அனைவருக்கும் அன்பின் வாழ்த்துகள்!

**மறைமாவட்ட விவிலிய வினாடி வினாப் போட்டி**

2017-18 ஆம் ஆண்டு மறைக்கல்வி மாணவர் களுக்கான விவிலிய வினாடி வினா போட்டி மறைமாவட்ட அளவில் பிப்ரவரி 25 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2.30 மணிக்கு படந்தாலுமூடு திருஇருதய ஆலய அரங்கில் நடைபெற்றது. வகுப்பு 5 முதல் 12 வரை பயிலும் மறைக்கல்வி மாணவர்கள் பங்கேற்றனர். ஒவ்வொரு வகுப்புகளிலும் பங்களவில் முதலிடம் பெற்ற மாணவன் மற்றும் மாணவி ஒருவரும் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

| ஏப்ரல் மாத நிகழ்வுகள்: | |
|---|---|
| 7 | தலைமையாசிரியர் கூடுகை மதியம் 2.30 மணி - மறைக்கல்வி நிலையம் |
| 8 | இரண்டாம் பருவத்தேர்வு - வகுப்பு 1/2 முதல் 9 வரை |
| 9 | வாழ்க்கை வழிகாட்டி கருத்தரங்கு - புனித அல்போன்சா கலைக்கல்லூரி |
| 16 | போட்டித்தேர்வு மாணவர்களின் பெயர் பட்டியல் ஒப்படைக்க வேண்டிய கடைசி நாள் |
| 22 | இரண்டாம் பருவத்தேர்வு - வகுப்பு 10, 11, 12 மறைவட்ட ஆலயத்தில். |
| 27, 28 | மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான வி.பி.எஸ் பயிற்சி-கல்லுவிளை. (ஒவ்வொரு பங்கிலிருந்தும் குறைந்த பட்சம் நான்கு பிரிவுகளுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் கலந்து கொள்ள வேண்டும்) |
| 29 | போட்டித்தேர்வு வகுப்பு 3 முதல் 9 வரை-படந்தாலுமூடு |

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு
இயக்குநர்.

சிறுமலர் MISSION LEAGUE

# சிறுமலர் மிஷன் லீக்

**பொறுப்பாளர் கூடுகை**

மிஷன்லீக் பொறுப்பாளர் கூட்டம் மார்ச் 13 அன்று இயக்குநர் அருட்தந்தை ஷோஜோ அவர்கள் தலைமையில் கல்லுவிளை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 10, 11, 12 ஆம் மாணவர்களுக்கு நடைபெறும் விடுமுறை தியானம் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுக்குப் பின் ஒவ்வொரு பங்களவிலும், மறைவட்ட அளவிலும் நடத்த தீர்மானிக்கப் பட்டது. மேலும் இயக்குநர் அவர்கள், “நாட்டில் நடைபெறும் அசாதாரண அரசியல் மற்றும் சமூக கலாச்சார சூழ்நிலைகளுக்கு விடைகாணும் விதமாக சிறுவயது முதலே மாணவர்கள் புத்தக வாசிப்பு பழக்கங்களில் ஈடுபடவேண்டும் என்றும், அதற்காக சிறுமலர் இதழை அனைத்து மாணவர்களும் வாங்கி படிக்க அருட்தந்தையர்கள் ஊக்கமூட்ட வேண்டும்” என்று ஆயர் அவர்கள் அருட்தந்தையர்கள் பேரவையில் எடுத்துரைத்தை சுட்டி காட்டி பொறுப்பாளர்களும் இப்பணியை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து தந்தை அவர்களின் ஆசியுடன் நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ
இயக்குநர்.

## ஏப்ரல் மாத வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| 02 | குருத்துவ அருட்பொழிவு: திருத். சுபின் சக்கரியா, துருத்தி |
| 05 | ஆயர் திருநிலைப்பாடு: ஜாண் நெல்லிக்குந்நேல், இடுக்கி |
| 06 | குருத்துவ அருட்பொழிவு: திருத். டோரத்திக், கல்லுவிளை |
| 07 | குருத்துவ அருட்பொழிவு: திருத். தோமஸ் ஜெபனேஷ், சூசைபுரம் |
| 09 | வழிகாட்டி முகாம் |
| 13 | அல்போன்சா கல்லூரி: ஆயரின் மேய்ப்புப் பார்வை |
| 14 | மதுரை திருத்தொண்டுதளத்திற்கான ஒருநாள் செபம் |
| 15 | மதுரை திருத்தொண்டுதள தொடக்கவிழா |
| 24 | அருட்தந்தையர்கள் கூட்டம்: சங்கமம் |
| 27-29 | இறையழைத்தல் முகாம்: இளங்குருமடம் |

# அருட்சகோதரர்களிடமிருந்து...




இறையருளால் அனைத்து அருட்சகோதரர்களும் நலமாக உள்ளனர்.

**புனித வார நிகழ்வுகளுக்கு உதவி**

அருட்சகோதரர்கள் அனைவரும் கோடை விடுமுறைக்காக மார்ச் மாதம் மறைமாவட்டம் வருகை தந்தனர். பின்னர் புனித வார நிகழ்வுகளுக்கு உதவி செய்ய பங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

உஜ்ஜயின் மற்றும் வராங்கல் குருத்துவ கல்லூரிகளில் பயிலும் அருட்சகோதரர்கள் டோஜி மற்றும் ஜினு ஆகியோர் ஏப்ரல் 20 மற்றும் 15 அன்று மறைமாவட்டம் வருகை தர உள்ளனர்.

உரோமையில் இறையியல் பயின்று வரும் திருத்தொண்டர் அபிலாஷ் அவர்கள் தனது இறையியல் கல்வியை நிறைவு செய்து ஜூன் மாத இறுதியில் மறைமாவட்டம் திரும்புகிறார்.

**குருத்துவ அருட்பொழிவுக்கு முந்தைய அருட்பொழிவுகள்:**

மார்ச் 26 அன்று காலை 7 மணிக்கு சங்கமத்தில் வைத்து குருத்துவ அருட்பொழிவுக்கு முந்தைய அருட்பொழிவுகளை ஆயர் அவர்கள் வழங்கினார். அருட்சகோதரர் டோபின் அவர்கள் ஹெவுப்புதியாக் கோனா திருப்பட்டமும், கடந்த ஆண்டு களப்பணி நிறைவு செய்த அருட்சகோதரர்கள் மகேஷ், ஜோஸ் ஆகியோர் திருவுடையும் பெற்றனர்.

மெய்யியல் நிறைவு செய்த 8 அருட்சகோதரர்கள் இவ்வாண்டு மறைமாவட்டங்களில் களப்பணியாற்ற உள்ளனர். அவர்களுக்கான கூட்டம் ஏப்ரல் 19 அன்று ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

**குருத்துவ அருட்பொழிவு**

ஏப்ரல் 02 அன்று திருத்தொண்டர் சுபின் சக்கரியா அவர்கள் கேரளா துருத்தியில் வைத்தும், ஏப்ரல் 06 அன்று திருத்தொண்டர் டோரத்திக் அவர்கள் கல்லுவிளையில் வைத்தும், ஏப்ரல் 07 அன்று திருத்தொண்டர் தோமஸ் ஜெபனேஷ் அவர்கள் சூசை புரத்தில் வைத்தும் ஆயர் அவர்களால் குருவாக அருட்பொழிவு பெற உள்ளனர்.

**களப்பணி முகாம்**

அருட்சகோதரர்களுக்கான களப்பணி முகாம் காமராஜ் நகரில் வைத்து ஏப்ரல் 20 முதல் 25 வரை நடைபெற உள்ளது. ஆயர் அவர்கள் இம்முகாமை தொடங்கி வைப்பார். தொடர்ந்து 25, 26

ஆகிய இருநாட்கள் இன்பச் சுற்றுலா செல்லவிருக்கின்றனர்.

**VBS பயிற்சி**

அருட்சகோதரர்கள் தலைமையில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான இருநாள் **VBS** பயிற்சி கல்லுவிளையில் நடைபெறும். தொடர்ந்து அருட்சகோதரர்கள் **VBS** பயிற்சிக்காக பங்குகளுக்கு செல்லவிருக்கின்றனர்.

**இறையழைத்தல் முகாம்**

மறைமாவட்ட இறையழைத்தல் முகாம் ஏப்ரல் 27 முதல் 29 வரை மூன்று நாட்கள் முக்கூட்டுக்கல் இளங்குருமடத்தில் வைத்து இளங்குருமட அதிபர் அருட்தந்தை ஜோஷி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அருட்சகோ. டோஜி|தலைவர்

**<u>மதுரை திருத்தொண்டுதள முதல் அறிமுக கூட்டம்</u>**

மதுரை திருத்தொண்டுதள முதல் அறிமுக கூட்டம் மார்ச் 1 அன்று 2.30 மணியளவில் தீபகத்தில் வைத்து ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் செபத்துடன் தொடங்க, ஆயர் அவர்கள் அனைவரையும் வரவேற்று மதுரை திருத்தொண்டுதளத்தின் பெயராக சாவறா திருத்தொண்டுதளம் எனவும் அதன் தொடக்க நாள் ஏப்ரல் 15 எனவும் அறிவித்தார். தொடர்ந்து அதன் முதல் பங்குத்தந்தையாக தீபக மைய இயக்குநர் அருட்தந்தை அனீஸ் அவர்களையும் நியமித்தார். தொடர்ந்து தொடக்க விழா நிகழ்வுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. அதன்படி ஏப்ரல் 15 அன்று மாலை 4 மணிக்கு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலியும் பொதுக்கூட்டமும், தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்வுகளும், அன்பின் விருந்தும் நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது. மதுரை பேராயர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார் எனவும் தீர்மானிக்கப்பட்டது. திருமதி ரின்சி ஜோஸ் அவர்கள் கலைநிகழ்ச்சிகளுக்கான தயாரிப்பையும், திரு லிக்ஸன் அவர்கள் அனைவரையும் அழைப்பு விடுக்கும் பணிகளை மேற்கொள்ளவும் பொறுப்புகள் வழங்கப்பட்டது. தொடர்ந்து இத்திருத்தொண்டுதளம் அமைவதற்கு அரும்பணியாற்றி தற்போது மாற்றலாகி செல்லவிருக்கும் அருட்தந்தை நிமிஷ் அவர்களை இத்திருத்தொண்டுதளம் இழப்பதாகவும், அதை புதிதாக பொறுப்பேற்றிருக்கும் அருட்தந்தை அனீஷ் அவர்கள் நிவர்த்தி செய்வார் என அனைவரும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்தனர். தொடர்ந்து நடைபெற்ற செபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது.

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

### தவக்கால தியானம்

சீனாய் தியான மையமும், இளையோர் இயக்கமும் இணைந்து இளையோர்களுக்கான ஒருநாள் தவக்கால தியானம் மார்ச் 11 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது. காலை 10 மணிக்கு தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ அவர்கள் தொடக்கசெப வழிபாட்டோடு தியானத்தை தொடங்கி வைத்தார். தொடர்ந்து கோவை சகோ. வின்னி அவர்கள் பாவம், ஒப்புரவு, பத்துக்கட்டளைகள் குறித்த சிந்தனையில் தியானத்தை வழி நடத்தினார். மதிய உணவுக்குப்பின் நற்கருணை ஆராதனையும், ஒப்புரவு வழிபாடுகளும் நடைபெற்றன. மதியம் 3 மணிக்கு ஆயர் அவர்கள் வருகை தந்து திருப்பலி மற்றும் ஒப்புரவு அருளடையாளம் வழங்கி இளையோர்களின் ஆன்மீக நலனுக்காக செபித்தார். இயக்குநர் அவர்களும் உடனிருந்து நிறைவுரையாற்றினார். பபிஷா அவர்கள் நன்றி கூறினார். 192 இளையோர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### படந்தாலுமூடு மறைவட்ட செயற்குழு தேர்வு மற்றும் அரைநாள் பயிற்சி

படந்தாலுமூடு மறைவட்ட செயற்குழு தேர்வு மற்றும் அரைநாள் பயிற்சி படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயத்தில் வைத்து மார்ச் 18 அன்று நடைபெற்றது. பிற்பகல் 2 மணிக்கு இறைவேண்டலுடன் பயிற்சி ஆரம்பமானது. முன்னாள் மறைவட்ட தலைவர் அனைவரையும் வரவேற்று அறிமுக உரையாற்றினார். தொடர்ந்து இயக்குநர் அருட் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் அழைத்தலைத் தேர்ந்து தெளிதல் என்ற மையப் பொருளின் அடிப்படையில் பயிற்சியை உரையாடல் வழியாக நடத்தினார். தொடர்ந்து நடைபெற்ற செயற்குழு தேர்வில் தலைவராக ஆஸ்டின் படந் தாலுமூடு, துணைத் தலைவராக ஜின்சி ஜாண் கழுவன்திட்டை, செயலராக ஷாபினி அதங்கோடு, துணைச் செயலராக ஜெசின் தெற்றியோடு, பொருளராக ஜெனிஷ் அதங்கோடு ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டனர். தொடர்ந்து இயக்கப் பாடல் பாட தேநீர் விருந்துடன் மாலை 5 மணிக்கு நிறைவு பெற்றது.

**மருத்துவமனை தூய்மைபடுத்துதல் முகாம்**

மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர் இயக்கத்தினர் மார்ச் 18 அன்று அருமனை அரசு மருத்துவமனை வளாகத்தை சுத்தம் செய்தனர். இந்நிகழ்ச்சியை இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தொடங்கி வைத்தார். மஞ்சாலுமூடு மறைவட்ட தலைவர் ஜினோ அவர்கள் நிகழ்வை ஒருங்கிணைத்து நடத்தினார். அருட்சகோதரர் மகேஷ் அவர்களும் உடனிருந்தார்.

**நித்திரவிளை மறைவட்ட செயற்குழு தேர்வு**

படந்தாலுமூடு மறைவட்ட செயற்குழு தேர்வு மார்ச் 25 அன்று நடைபெற்றது. இறைவேண்டலுடன் ஆரம்பமாக, இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் அழைத்தல் என்ற மையப் பொருளின் அடிப்படையில் பயிற்சியை வழிநடத்தினார். தொடர்ந்து நடைபெற்ற செயற்குழு தேர்வில் தலைவராக அபிமோள் வயலின்கரை, துணைத் தலைவராக பெல்ஜின் முஞ்சிறை, செயலராக நித்யா முஞ்சிறை, துணைச்செயலராக அஞ்சு நித்திரவிளை, பொருளராக பைஜு முஞ்சிறை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொடர்ந்து இயக்கப் பாடல் பாட தேநீர் விருந்துடன் மாலை 5 மணிக்கு நிறைவு பெற்றது.

செல்வி. பபிஷா| செயலர்.

**முதல் பட்டமளிப்பு விழா, கல்லூரி ஆண்டுவிழா**

புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியில் கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா மார்ச் 16 அன்று நடைபெற்றது. மொத்தம் 145 மாணவர்களில் 135 மாணவர்கள் அதாவது 90 விழுக்காடு மாணவர்கள் இளங்கலை மற்றும் அறிவியல் பட்டம் பெற்றனர். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக துணை முதல்வர் முனைவர் கிருஷ்ண பாஸ்கர் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பட்டைய சான்றிதழ்களை வழங்கினார். ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

மார்ச் 16 அன்று கல்லூரி ஆண்டுவிழாவும் நடைபெற்றது. இதில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக பதிவாளர் முனைவர் சந்தோஷ் பாபு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கருத்தரங்கை வழிநடத்தினார்.

Kanyakumari Social Service Society


# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**குடும்பம் ஒன்றை காப்போம் திட்டம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் “குடும்பம் ஒன்றை காப்போம்” திட்டத்தின் விழிப்புணர்வு முகாம் கல்லுவிளை ஆசீர்அரங்கத்தில் வைத்து பிப்பிரவரி 28 தேதி காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக குடும்பம் ஒன்றை காப்போம் திட்டத்தின் ஒருங்கினைப்பாளர் திரு.விஜயா ராஜன் அவர்கள் திட்டத்தின் நோக்கம் திட்டத்தை பயனாளிகள் சிறுதொழிலுக்கு முதலீடு செய்வது பற்றி கூறினார். இந்நிகழ்வில் களப்பணியாளர்கள் திருமதி லிசி, திருமதி சரோஜம் ஆகியோர் உட்பட 265 பயனாளிகள் கலந்து கொண்டனர்.

**கிராம முன்னேற்ற விழிப்புணர்வு முகாம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் நாஞ் சில் கத்தோலிக்க கல்லூரி சமூக பணித்துறை மாணவர்கள் இணைந்து ஒருநூறாம் வயலில் வைத்து கிராம முன்னோற்ற விழிப்புணர்வு முகாம் ஒன்றை பிப்ரவரி 23 முதல் 25 வரை நடத்தியது. இரண்டாம் நாளன்று சமூக பணித்துறை மாணவர்கள் மூன்று குழுக்களாக பிரிந்து வீடுகள் கணக்கெடுப்பு செய்ய, அதில் 73 வீடுகள் கண்டறியப்பட்டு அவர்களின் குறைகளை தெரிந்து கொண்டனர். அப்போது சாலை, மருத்துவம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல்



இருப்பதாக கூறினர். இரவு நேரங்களில் குடும்பங்களை ஒருங்கிணைத்து கலை நிகழ்சிகளையும், மாணவர்களின் திறமையை ஊக்குவிக்க கலை மற்றும் விளையாட்டு போட்டிகளையும் நடத்தினர். முகாமின் நிறைவு விழா அருட்தந்தை டோபின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி அவர்கள் ஏழை குழந்தைகள் படிப்பை தொடர இயலாமல் இடைநிற்றலை தவிர்க்கவும், படிப்பில் பின்தங்கிய மாணவர்களை முன்னேற்ற பாதையில் செல்லவும் புதிதாக டீயுசன்

சென்டர் ஒன்றை தொடங்கி வைத்து துவக்கயுரையாற்றினார். அப்போது மலை வாழ் மக்களின் வளர்ச்சிக்கு தேனி மற்றும் ஆடு வளார்த்தல், குழுசேமிப்பு திட்டங்கள் மற்றும் பல விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துவதாகவும், அதற்காக உதவி செய்து வருவதாகவும் இனியும் எம் நிறுவனம் உதவும் என உறுதியளித்தார். பின்பு சமூக பணித்துறை மாணவார்களி ஆனந்த் மற்றும் நிஷா ஆகியோர் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு பயிற்சி நடத்தினர். முமுளுளுளு இணை இயக்குநர் அருட்தந்தை வினு அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். இடைஇடையே கலைநிகழ்சிகள் நடைபெற்றன. பின்பு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக சமூக பணித்துறை மாணவி ரெஜி மோள் நன்றி கூறினார். இதில் கன்னியாகுமரி சமூக சேவை சங்க திட்ட அலுவலர் திருமதி ஷுபா, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் என ஏரளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சியை நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி மற்றும் டோன் போஸ்கே கல்லூரி சமூக பணித்துறை மாணவர்கள் ஒருங்கினைத்தனர்.

**மருத்துவ முகாம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் மக்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு பல்வேறு மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகின்றன. புதுவாழ்வு என்ற நோக்கத்தின் வழியாக கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் பெஜான்சிங் கண் மருத்துவமனை இணைந்து 09/03/2018 அன்று தடிக்காரன்கோணம் புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி சமூக சேவை சங்க துணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவர் பிரபின் மற்றும் இராணிமரியா சதன் இல்ல தலைமை அருட்சகோதரி ஆனி கிரோஸ் FCC ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். இதில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் என 69 பேர் கலந்து கொண்டு இலவச கண் பரிசோதனை செய்து, மருந்துகள் மற்றும் ஆலோசனையும் பெற்றனர். 5 நபர்களுக்கு இலவச கண்புரை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும் குறைந்த விலையில் கண் கண்ணாடிகளும் வழங்கப்பட்டன.

**மகளிர் தினம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் இயங்கும்

சுயஉதவி குழுக்களின் ஆண்டு விழா மற்றும் மகளிர் தினம் பிப்பிரவரி 24 முதல் மார்ச் 18 தேதி வரை 35 மையங்களில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்சியில் சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி மற்றும் இணை இயக்குநர் அருட்தந்தை வினு ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டு பெண்கள் முன்னேற்றத்திற்கான கருத்துக்களையும் படுக்கை நோயாளிகளுக்காக உண்டியல் மூலம் உதவியதற்கு நன்றியும் தெரிவித்தனர். பின்பு உறைவிடம் அமைக்க ஓர் கைத்தாங்கல் என்ற நோக்கத்தில் வீடில்லாத ஏழைகளுக்கு வீடு அமைக்க கூடு என்ற புதிய திட்டம் தொடங்குவதாகவும் இத்திட்டம் தொடங்க துணை நிற்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். விழாவில் சிறப்பு விருந்தினராக மறைமாவட்ட அருட்தந்தையர்கள், பஞ்சாயத்து முன்னாள் தலைவர்கள் மற்றும் வங்கி பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பெண்களும் சுய தொழிலும் என்ற கருத்தினை மையமாக வைத்து சிறப்புரை ஆற்றினர். நிகழ்விற்கு இடையே பல்வேறு விதமான கலைநிகழ்வுகள் நடைபெற்றது சிறப்பாக கலைநிகழ்வுக்கு நடத்தியவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. கேன்சர், இதய நோய்கள் மற்றும் சுத்தம் சுகாதாரம் என்ற தலைப்பில் நாஞ்சில் கத்தோலிக்க கல்லூரி சமூக பணித்துறை மாணவர்கள் நிஷா, ரெஜி மோள் மற்றும் ஆனந்த் ஆகியோர் விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தினர். நிகழ்வுகளை அந்தந்த வட்டார களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்து நடத்தினர்.

**குழந்தைகள் பாரளுமன்றம்**

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் நடத்தப்படும் அன்னை தெரசா குழந்தைகள் பாரளுமன்றம் என்ற அலகின் சார்பில் வலியவிளை குடிநீர் தேக்க தொட்டியை புனித வியாகப்பர் ஆலய பங்குதந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் குழந்தைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து சுத்தம் செய்தனர். குழந்தைகள் பாரளுமன்ற ஊக்குவிப்பாளர் திரு. ரவிக்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார். குடிநீர் தொட்டியை சுத்தம் செய்ய பலமுறை அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காதபோது குழந்தைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமூக சிந்தனையோடு தாங்களாகவே முன்வந்து செய்த நற்செயலை பொது மக்கள் பாராட்டினர். 35 குழந்தைகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை சஜி எலம்பசேரில்
இயக்குநர்



FAMILY APOSTOLATE

குடும்ப நல்வாழ்வு

# இல்வாழ்வு இயக்கம்

### மதுஅடிமைகள் மறுவாழ்வு மையம்

கல்லுவிளை மதுஅடிமைகள் மறுவாழ்வு மையத்தில் மது மற்றும் மனநோய்களுக்கான சிகிட்சையும், ஆற்றுப்படுத்துதலும் வாரந்தோறும் செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய நாட்களில் நடைபெற்று வருகிறது. மனநல மருத்துவர் அவர்களை செவ்வாய் கிழமைகளில் காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை சந்திக்கலாம்.

### குடும்ப சந்திப்பு

மஞ்சாலுமூடு பங்கில் 12 உறவியங்களின் வீடுகள் சந்திக்கப்பட்டு 7 உறவியங்களில் உறவியக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒப்புரவு பற்றி வகுப்புகள் வழங்கப்பட்டது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பங்குத்தந்தை மற்றும் அருட்சகோதரிகளுக்கு நன்றி. தற்போது தெற்றிவிளை பங்கில் வீடு சந்திப்பு நடைபெற்று வருகிறது.

### திருமண தயாரிப்பு பயிற்சி

ஜனவரி மாதம் நடைபெற்ற பயிற்சியில் 14 நபர்கள் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்றனர். இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் தலைமையில் அருட்சகோதரி றீமா, செல்வி சுதா ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். அடுத்தப் பயிற்சி ஏப்ரல் 13 அன்று காலை 10 மணிக்கு தொடங்கி 15 அன்று மாலை 4 மணிக்கு நிறைவு பெறும். பயிற்சிக் கட்டணம் 750 ருபாய்.

### தம்பதியர் சங்கமம்

மார்ச் 10 சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல்வாழ்வு இயக்குநர் தலைமையில் தம்பதியர் சங்கமம் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. இயக்குநர் தந்தை அவர்கள் அனைவரையும் வரவேற்புரை வழங்க, அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் குடும்ப வாழ்வின் முக்கித்துவத்தை மையமாகக் கொண்டு வகுப்புகளையும், விளையாட்டுகளையும் நடத்தினார். அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் குறும்படம் வழியாக திருமணம் என்றால் என்ன? அதன் இயல்புகள் பற்றி விளக்க தேநீர் இடைவேளை விடப்பட்டது. பின் 11.30 மணிக்கு

இளையோர்களை பங்கேற்கச் செய்து தம்பதியினரின் அனுபவங்களை பகிர்ந்ததோடு, இளையோர்களின் மனதில் பெற்றோர்கள் பற்றிய எதிர்பார்ப்பு, பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்ளுதல் போன்ற சிந்தனைகளும், சந்தேகங்களும், விளக்கங்களும் கேள்விகளுமாக வகுப்புகள் நடைபெற்றது. பெற்றோர்கள் உற்சாகத்தோடு விளக்கமளித்தனர். தொடர்ந்து பங்கேற்ற 17 தம்பதியருக்கு பரிசு வழங்கினார். திரு பெஞ் சமின் மஞ்சாலுமூடு அவர்கள் நன்றி கூற மதிய உணவுடன் 1 மணிக்கு நிறைவடைந்தது.

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்
இயக்குநர்

---

## BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS-APRIL

| | | |
|---|---|---|
| 14 | Bishop George Rajendran SDB | BIRTHDAYS |
| 01 | Rev. Fr. Antony Madappurackal | |
| 01 | Rev. Fr. Abin Poovathummoottil | |
| 02 | Rev. Fr. Vinu D. Joseph | |
| 04 | Rev. Fr. Jimmy Thekkekadumathil | |
| 08 | Rev. Fr. Ajeesh Attiyil | |
| 10 | Rev. Fr. Josy Puthenpurackal | |
| 14 | Rev. Fr. Dency Mundunadackal | |
| 24 | Rev. Fr. Jacob Aiyammathra | |
| FEASTDAYS | Bishop George Rajendran SDB | APR 24 |
| | Rev. Fr. Geo Choozhikunnel | |
| | Rev. Fr. George Panamthottam CMI | |
| | Rev. Fr. Rony Peedikayil MCBS | |
| | Rev. Fr. Sumesh Valliyamthadathil | |
| | Rev. Fr. Jipson Chully MCBS | |
| | Rev. Fr. Siji Puthenveliyil CMI | |

# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

**புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை**

**சூசைபுரம்**

சூசைபுரம் மறைவட்ட ஆலயத்தில் தவக்கால தியானம் ஓசானா ஞாயிறன்று நடைபெற்றது. ஒப்புரவு அருளடையாளமும் நடைபெற்றது.

பாஸ்கா வியாழன்று பாதம் கழுவுதல் திருச்சடங்கிற்கு பின் இரவு கண்விழிப்பு செபம் நடைபெற்றது.

**கிள்ளியூர்**

கிள்ளியூர் புனித தேவமாதா ஆலயத்தில் செயல்படும் ஆங்கிலவழி பள்ளியின் ஆண்டுவிழா மார்ச் 1 அன்று சிறப்பாக நடைபெற்றது. பள்ளி மாணவர்களின் பல்வேறு கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கிள்ளியூர் ஆலயத்தில் இல்லங்களில் திருத்தூதுப்பணி (ஹோம் மிஷன்) மார்ச் 5 முதல் 10 வரை நடைபெற்றது. ஹோம் மிஷன் அருட்சகோதரிகள் இல்லங்களை சந்தித்து, உறவியங்களில் நற்செய்திக் கூட்டம் நடத்தி, ஒப்புரவு அருளடையாளம் பெற தயாரிப்பு செய்தனர். இதன் நிறைவாக ஆயர் அவர்கள் மார்ச் 11 ஞாயிற்றுக்கிழமை அன்று வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி ஆசி வழங்கினார். மதியம் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது. அருட்சகோதரிகளின் சந்திப்பு வழியாக பல ஆண்டுகள் ஆலயத்திற்கு வராமலிருந்த ஒருசில குடும்பங்கள் மீண்டும் வருகை தந்தது சிறப்புமிக்கது.

இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் விதமாக மார்ச் 17 அன்று பங்குத்தந்தை மற்றும் பங்குமக்கள் இணைந்து குருசுமலை திருப்பயணம் மேற்கொண்டு சிலுவைப்பாடுகளை நினைவு கூர்ந்து செபித்தனர். மார்ச் 18 அன்று உறவியங்களின் சார்பில் ஒவ்வொரு இல்லங்களிலும் சிலுவைப்பாதை செய்து செபித்தனர். மேலும் 26 அன்று 14 ஆலயங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு சிலுவைப்பாதை செய்தனர்.

மார்ச் 19 அன்று பங்குத்தந்தையின் பெயர்கொண்ட திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் கேக் வெட்டி சிறப்பித்தார். பங்குமக்கள் வாழ்த்துரை வழங்கினர்.

பெசகா வியாழனன்று அருட்தந்தை அவர்கள் மனமாறி வருகை தந்த 12 பேரின் பாதங்களை கழுவி திருப்பலி நிறைவேற்றினார். பங்கு மக்கள் தங்கள் வீடுகளில் அப்பம் செய்து, ஆலயத்திற்கு கொண்டு வந்து பகிர்ந்துண்டனர்.

ஆலயத்தின் பீடப்பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. விரைவில் பூர்த்தியடைய செபிக்கவும்.

**மாங்கரை**

மார்ச் 11 அன்று மாதர் ஜோதிஸ் இயக்கத்தினர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் பெருஞ் சிலம்பு மாற்றுத்திறனாளிகளை சந்தித்தனர். அருட்சகோதரிகள், 9 மாணவர்கள் மற்றும் 22 தாய்மார்கள் இதில் கலந்து கொண்டனர்.

மார்ச் 21 அன்று மறைமாவட்ட ஆலயங்களுக்கு தவக்காலத்தை முன்னிட்டு திருப்பயணம் மேற்கொண்டு சிலுவைப்பாதை செய்தனர்.

புனித வார தயாரிப்பிற்காக மார்ச் 28 அன்று திருப்பலிக்குப் பின் நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவு குறித்த தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் வழிநடத்தினார்.

**பாலப்பள்ளம்**

மார்ச் 4 அன்று பங்கு பொதுமன்றம் நடைபெற்றது. இம்மன்றத்தில் புதிய கைக்காரர்களுக்கான தேர்வு நடைபெற்றது. மேலும் கல்வி மையக் கட்டிடத்தை மாற்றியமைக்கவும் தீர்மானிக்கப் பட்டது.

18 அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கான தனித் திருப்பலியும் சிறப்பு வகுப்பும் நடைபெற்றது. அன்றைய தினம் பங்குத்தந்தை அருட்தந்தை பிரிண்டோ அவர்களின் பெயர் கொண்ட திருநாளும் கொண்டாடப்பட்டது. கைக்காரர் பூங்கொத்து கொடுத்து வரவேற்க, மறைக்கல்வி மாணவர்களும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து தலைமையாசிரியை அருட்சகோதரி லிட்டி அவர்கள் தலைமையில் வாழ்த்தினர். தொடர்ந்து திருமதி ஜாக்குலின் அவர்கள் வாழ்த்துரை வழங்க தந்தை அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

## நித்திரவிளை மறைவட்டம்

**முஞ்சிறை**

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் தவக்கால தியானம் 'ஆண்டவரோடு ஒரு நாள்' என்ற பெயரில் ஒருநாள் தியானம் மார்ச் 11 அன்று காலை

9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. தியானத்தை சகோ. ஜாண் அவர்கள் உண்மை என்னும் மையச்சிந்தனையில் உண்மையான மனமாற்றம், சாட்சிய வாழ்வு ஆகிய தலைப்புகளில் வழிநடத்தினார்.

மார்ச் 18 அன்று சிறார்களுக்கும், யூதித் பொறோம்-கைம்பெண்களுக்கும் விளையாட்டுப் போட்டிகள் அன்பகத்தில் நடைபெற்றது.

மார்ச் 19 அன்று சூசையப்பர் திருநாள் அருட்சகோதரிகள் இல்லத்தில் எஸ்.டி துறவற சபை நிறுவனர் தினமாக அனுசரிக்கப்பட்டு சிறப்பாக கொண்டாடப்பட்டது. சிறப்புத்திருப்பலி, இரவுணவு மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

மார்ச் 25 ஓசானா திருநாளன்று மதியம் 1 மணிக்கு பங்குமக்களும் பங்குத்தந்தையும் இணைந்து சிலுவைப்பாதை திருப்பயணம் மேற்கொண்டனர். முஞ்சிறை ஆலயத்தில் தொடங்கிய இப்பயணம் தக்கலை எலியாசியார் ஆலயத்தில் நிறைவடைந்தது.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### முழுக்கோடு

ஓசனா ஞாயிறு தொடக்க வழிபாடுகள் பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்திலிருந்து தொடங்கி பவனியாக வருகை தந்து முழுக்கோடு ஆலயத்தில் நிறைவு வழிபாட்டோடு நிறைவடைந்தது. தொடர்ந்து அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. அதைப்போன்று புனித வெள்ளியன்று இருபங்குமக்களும் முழுக்கோடு ஆலயத்தில் ஆராதனையும், திருச்சடங்குகளும் தியானித்து பின்னர் சிலுவைப்பாதை திருப்பயணமாக பள்ளிக்கோணம் திருஇருதய ஆலயத்தில் சென்று நிறைவு செய்தனர்.

### மாறப்பாடி

மாறப்பாடி புனித தோமையார் ஆலயத்தில் தவக்காலத்தை முன்னிட்டு மார்ச் 16, 17, 18 ஆகிய மூன்று நாட்கள் சீனாய் தியானக்குழுவினரின் தியானம் நடைபெற்றது.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

### ஒருநாள் ஆராதனை

எர்ணாகுளம் உயர் மறைமாவட்ட சொத்து வழக்கில் பொய்குற்றம் சுமத்தப்பட்ட உயர்பேராயர் மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்கள் அவ்வழக்கிலிருந்து விடுதலை பெற மார்ச் 15 அன்று மறைமாவட்டம் முழுவதும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் ஒருநாள் ஆராதனை செய்து விடுதலை பெற செபித்தனர்.

# இதரச் செய்திகள்

## நிதிக்குழு

மறைமாவட்டம் தற்போது புதிய நிதிக்குழுவை உருவாக்கியுள்ளது. ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், பேரருட்தந்தை தோமஸ் சத்திய நேசன், பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை தோமஸ் பவ்வத்துப்பறம்பில், அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், அருட்தந்தை மேத்யூ தெக்கேகூற்று மற்றும் திரு அகஸ்டின் தறப்பேல் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

## மாதாந்திர படி

அருட்தந்தையர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர படி ஏப்ரல் மாதம் முதல் உயர்த்தப்பட உள்ளது. அதன்படி அருட்சகோதரிகளுக்கு வழங்கப்படும் உணவு கட்டணம் ரூபாய் மூவாயிரமும் சேர்த்து பத்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட உள்ளது.

## ஆயர் இல்ல செயலர்

அருட்தந்தை ஷோஜி புத்தன்புரைக்கல் அவர்கள் ஆயர் இல்ல அலுவலகச் செயலராக மார்ச் 14 அன்று பொறுப்பேற்றார். ஆயர் மற்றும் அலுவலக செய்திகளுக்கு செயலரை அணுகவும். தொடர்பு எண்: 8281809856

## கல்வி நிலை

அருட்தந்தை சனல் பந்திச்சிறக்கல் அவர்கள் தொலைநெறி வழியாக முதுகலை கல்வியல் பயின்று வருகிறார். அருட்தந்தை ரிட்டோ அவர்கள் ஆலப்புழ புன்னப்றாயில் ஏப்ரல் 30 முதல் மே 20 வரை இருவார உருவாக்கல் பயிற்சி பயில செல்லவிருக்கிறார். அருட்தந்தை றோபின் கூறுமுள்ளில் அவர்கள் ஆண்டிறுதி விடுமுறைக்காக மே மாத இறுதியில் மறைமாவட்டம் திரும்புகிறார்.

## இறையியல், சான்றிதழ் கல்வி

மூன்றாண்டு இறையியல் கல்வி பயிலும் விண்ணப்பதாரர்களின் தேர்வு நிறைவடைந்தது. இக்கல்வியின் தொடக்க விழா மே 12 மதியம் 2 மணிக்கு சங்கமத்தில் நடைபெறும். ஜூன் மாதம் முதல் மறைமாவட்ட கல்வி மையங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான சான்றிதழ் கல்வி சங்கமத்தில் தொடங்க திட்டமிடப்பட்டு வருகிறது.

புலரி என்டர்பிரைசஸ் பொருட்களின் காட்சி அறை மற்றும் சேமிப்பு அறை படந்தாலுமூட்டில் நிறுவப்பட உள்ளது.

## BISHOP'S ENGAGEMENTS APRIL 2018

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| **1** | **Sun** | **03.00 am** | **Padanthalumoodu: Easter Holy Qurbana** |
| 2 | Mon | 09.30 am | Ordination of Dn. Subin Scaria at Thuruthy |
| 3 | Tue | | Bishop's House |
| 4 | Wed | 10.00 am | KKSSS: Governing Body Meeting |
| 5 | Thu | 02.00 pm | Idukki: Episcopal Ordination |
| 6 | Fri | 09.30 am | Kalluvilai: Ordination of Dn. Dorathik |
| 7 | Sat | 09.30 am | Soosaipuram: Ordination of Dn. Jepanesh |
| **8** | **Sun** | **11.30 am** | **Bp's House: Visit of Mr. Jayan Cheriamadom from Kuwait** |
| 9 | Mon | 10.30 am | Soosaipuram: Meeting with 12 class Students |
| 10 | Tue | | Bishop's House |
| 11 | Wed | 9.30am\|7pm | Curia meeting\| CMC Thuckalay: Evening Prayer |
| 12 | Thu | 06.00 pm | Azhagiyamandapam: Holy Qurbana at FCC Provincial House |
| 13 | Fri | 10.00 am | Soosaipuram: Pastoral visits in the College |
| 14 | Sat | 06am- 06pm | Bp's house: Adoration and Prayer for Madurai Mission |
| **15** | **Sun** | **05.00 pm** | **Inauguration of Madurai Mission >> Changanacherry** |
| 16\|17 | Tue | 10.00 am | Changanacherry\|SABS Vestition Ceremony |
| 18 | Wed | 09.00 am | Mannanam: Ordination of Dn Josekutty CMI |
| 19 | Thu | 02.00 pm | Bishop's House: Meeting with Regent Brothers |
| 20 | Fri | 06.30 am<br>06.00 pm | Inaug. of work camp for Major Seminarians<br>Muchirai: Kodiyettu and Holy Qurbana |
| 21 | Sat | 06.30 am | Thuckalay: Holy Qurbana at CMC |
| **22** | **Sun** | **10.30am\|4pm** | **Feast day Holy Qurbana: Mekkarai \| Vanchinagar** |
| 23 | Mon | 05.00 pm | Bishop's House: Meeting with Regents' Directors |
| 24 | Tue | 09.30 am | Sangamam: Priests' Conference |
| 25 | Wed | 04.30 am | Journey to Kuwait |
| 26 | Thu | 06.00 pm | I Holy Communion & Confirmation at Ahmadi - Kuwait |
| 27 | Sat | 08am\|02pm | I Holy Communion & Confirmation: Abbassiya\| Salmya |
| 28 | Sat | 04.00 pm | Kuwait City Parish: Holy Qurbana |
| **29** | **Sun** | **06.45 pm** | **Mass at Abbassiya** |
| 30 | Mon | 07.00 am | Returns from Kuwait |

Rev. Fr. Shoji Puthenpurackal|Office Secretary




Assisi Vidyalaya, Chemamkode,
Anniversay - 02.03.2018




Jothi Nilayam, Palapallam, Anniversary -
20.03.2018



Couples' Meet, Family Apostolate, Sangamam,
10.03.2018



Myron Blessing 28.03.2018



Minor Orders, Sangamam, 26.04.2018

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570